# தமிழர் மரபில் விருந்தோம்பல்

*முனைவர் த. சந்திரா*
உதவிப் பேராசிரியர்
புனித ஜோசப் கல்வியியல் கல்லூரி, வெய்க்காலிப்பட்டி

**மலர்: 12**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: மார்ச்**

**வருடம்: 2025**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.14958707

***ஆய்வுச் சுருக்கம்***

*விருந்து விருந்தினர் விருந்தோம்பல் என்ற பண்பாட்டுத் தொடர்வினைகள் சங்கப்பாக்களில் அடையாளப்பட்டுள்ளன. சங்க அக இலக்கியம் சுட்டும் இல்லறத்தில் கணவனும் மனைவியும் ஆற்ற வேண்டிய அறமாக "விருந்தோம்பல்" சுட்டப்பட்டுள்ளது. கற்பொழுக்கத்தின் பயன் பற்றி கூறும் தொல்காப்பியர் அறம "புரி சுற்றமொடு சிறந்தது பயிற்றல் என்று "விருந்தோம்பும்" பாங்கினை வலியுறுத்தியுள்ளார். விருந்தோம்பலில் உணவு முறையானது குறிஞ்சி, முல்லை, பாலை, நெய்தல், மருதம் என்ற நில அமைப்பிற்கு ஏற்றவாறு மாறுபட்டு அமைந்துள்ளது. சுற்றம் ஓம்பலும், ஈகையும் கூட விருந்தோம்பலின் பாற்பட்டதே என்பது சான்றுகளின் வழி அறியத்தக்கது. பழந்தமிழரின் உயரியப் பண்பாடு விருந்தோம்பல்தான் என்பதனை சங்க இலக்கியம் தெளிவுறுத்துகின்றது.*

## முன்னுரை

தமிழர் பண்பாடுகளில் மிகவும் சிறப்புடையதாக கருதப்படும் பண்பு விருந்தோம்பல் ஆகும். சங்ககால தமிழ் இலக்கியங்கள் காதல், வீரம், கொடை மட்டுமின்றி இல்லற அறங்களில் ஒன்றான விருந்தோம்பலையும் சிறப்பாகக் கூறுகின்றன. சங்க இலக்கியங்கள் பழந்தமிழரின் பண்பாட்டினையும் சிறப்பினையும் வெளிப்படுத்துவனவாக அமைகின்றன. அவை மக்களின் பழக்கவழக்கங்களையும் வாழ்க்கை முறையினையும் விளக்குகின்றன. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் சிறப்பினை அவர்களது விருந்தோம்பல் மூலம் அறிய முடியும். சங்க இலக்கியங்கள் வழி அறியலாகும் சங்ககால மக்களின் விருந்தோம்பல் பண்பினை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## தமிழர் மரபு

மரபு என்பது நம் முன்னோர் ஒரு பொருளை எச்சொல்லால் வழங்கினாரோ அச்சொல்லால் வழங்குவது மரபு ஆகும். இது ஒரு குறிப்பிட்ட குழு, இனம், வகை ஆகியவற்றின் வழியில் தலைமுறைகள் பலதாண்டி தொடர்ச்சியாய் வரும்.சு பண்பாட்டின் எல்லா நிலைகளிலும் மக்களால் பின்பற்றப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதியே மரபுசு என்கிறது தமிழ் அகராதி. தமிழர் மரபு என்பது தமிழ் இனத்தின் மரபு, பண்பாட்டின் எல்லா நிலைகளிலும் தமிழின மக்களால் பின்பற்றப 'பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட வழக்கங்கள். பெற்றோர்கள் அல்லது முன்னோர்களிடமிருந்து சந்ததிகளுக்கு கடத்தப்படும் செயல்முறைகள் தமிழர் மரபு ஆகும்.

**விருந்து, விருந்தினர்**

விருந்து என்பது உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் சேர்ந்து உணவு உண்பதன் மூலம் மகிழ்வு அடைவதற்கான ஒரு சிறப்பு நிகழ்வு. விருந்து என்பது புதுமை, புதிதாக வந்தவரை விருந்தினர் என்கிறோம். "விருந்து" என்ற சொல் புதுமையைக் குறித்துப் பண்பு ஆகுபெயராய் விருந்தினரைக் குறித்து வழங்கலாயிற்று.

விருந்தினர்கள் என்போர் விருந்தாளிகள், இவர்களை வடநூலார் "அதிதி" என்பர்.

தமிழ்நெறி வாழ்க்கையில் விருந்தினர் வெறுமனே விருந்துண்டு செல்பவர்கள் அல்லர். கற்பியல் வாழ்க்கையில் தலைவன், தலைவியர் கூடிவாழ உதவிபுரியும் வாயில்களாகவும் விளங்கினர். தொல்காப்பியர், புதிதாக தோன்றும் எல்லா இலக்கியங்களையும் விருந்து என்ற சொல்லில் குறிப்பிடுகிறார்.

**"விருந்தே தானும்**
**புதுவது புனைந்த யாப்பின் மேற்றே"**
***(பொருள் 1495)***

என்ற நூற்பா இதனை விளக்கும். இதன் அடிப்படையிலேயே புதியதாக வருபவர்களை விருந்தினர் என்று குறிப்பிட்டுள்ளனர்.

**விருந்தோம்பல்**

விருந்தோம்பல் என்ற சொல்லில் உள்ள "விருந்து" என்ற சொல் "புதுமை" என்றும் ஓம்பல் என்ற சொல் "பாதுகாத்தல்", "சிறப்பு செய்தல்" என்றும் பொருள் தருகின்றன. எனவே விருந்தோம்பல் என்ற சொல் தம் இல்லம் தேடி வரும் புதியவர்களுக்கு உணவளித்து சிறப்பு செய்யும் விருந்தரத்தையே குறிக்கின்றது எனலாம். விருந்தோம்பல் என்பதற்கு இணையான ஆங்கில சொல் HOSPITALITY என்பதாகும். விருந்தோம்பல் என்பதற்கு கழக தமிழ் அகராதி புதிதாய் வருபவரை உண்டி முதலியவற்றால் உபசரித்து நடத்துவது என சுட்டுகின்றது.

விருந்தோம்பல் என்பது தமிழர்களின் தலையாய கடமைகளுள் ஒன்றாகும். தன் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ந்து வரவேற்று உண்ண உணவும் இடமும் கொடுத்து அவர்களிடம் அன்பு பாராட்டுதல் விருந்தோம்பல் ஆகும். இல்லற கடமைகளில் ஒன்றான திருமணம் நடைபெறுவதன் நோக்கமே விருந்தோம்பலாகும். தொல்காப்பியர்,

**"விருந்து புறந்தருதலுஞ் சுற்றம் ஓம்பலும்**
**பிறவு மனை கிழவோன் மாண்புகள்"**
***(தொல் - 3:150)***

என்று குறிப்பிடுகிறார். இதன் வழி விருந்து புறந்தருதல் இல்லற மாண்புகளில் ஒன்றாக கருதப்படுகிறது எனலாம்.

**விருந்திற்கான காரணம்**

பழங்காலம் உணவு விடுதிகள் இல்லாத காலம். வெளியூர்க்குச் செல்வோர் பலநாளுக்கு வேண்டிய உணவினைக் கொண்டு செல்ல இயலாது. செல்வர்களும் வணிகர்களும் தேர்களிலும் மற்ற ஊர்திகளிலும் செல்லும்போது உணவிற்குத் தேவையான பொருள்களைக் கொண்டுசெல்ல முடிந்தது. மற்றவர்கள் உணவையோ, உணவுப் பொருள்களையோ கொண்டு செல்ல முடியாதநிலை இருந்தது. அதனால் உணவிற்கு வருந்துவோருக்கு உணவளித்தல் இன்றியமையாத அறமாகப் போற்றப்பெற்றது. அந்நிகழ்வே தொடர்ந்து வரும் காலங்களில் உருமாற்றம் பெற்று விருந்தோம்பலானது எனலாம்.

**விருந்து பேணும் முறைமை**

திருவள்ளுவர் விருந்தோம்பும் பான்மையை,

**"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து" *(குறள்.90)***

அனிச்சம் மலரினும் மெல்லியர் விருந்தினர். அவர்களை நோக்கும் தன்மையில் மென்மை வேண்டும். இன்முக வரவேற்பே விருந்தோம்பலில் முதன்மையானது என்கிறார். அகஇலக்கியத்தில் "எக்காலமும் விருந்திற்கு உகந்த காலமாக" குறிப்பிடப்பட்டுள்ளது. விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்ற மகளிரை "முல்லை சான்ற கற்பினள்" என்று குறிப்பிடுகின்றது நற்றிணை.

**"அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும்**
**முல்லை சான்ற கற்பின்**
**மெல்லியல் குறுமகள்" *(நற்றிணை 142:9-11)***

சங்ககால மகளிர் நள்ளிரவில் விருந்தினர் வந்தாலும் முகம் திரிந்து நோக்காது. அவர்களை எதிர் கொண்டு வரவேற்று உணவளித்தமையைக் கற்புடைமைக்குப் பொருத்திக்காட்டியுள்ளனர். அமிழ்தமே கிடைத்தாலும், அதனைத் தனித்து உண்ணாது வரும் விருந்தினருக்குக் கொடுத்து உண்பவரை இவ்வுலகம் வாழ்த்தும் என்பதனை,

**“உண்டாலம்ம இவ்வுலகம் இந்திரர் அமிழ்தம்**
**இயைவதாயினும் இனிதென தமியர் உண்ட**
**லுமிலரே”-(புறம்-182)**

என்ற அடிகளின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது

விருந்தோம்பலில் உபசரிக்கும் பாங்கே முதன்மையானது. முகம் மலர்ந்து உபசரிக்கும் போது, விருந்துப்பொருள் உப்பில்லாத கூழாக இருந்தாலும் சிறப்பாக இருக்கும்.

**“ஒப்புடன் முகம லர்ந்து**
**உபசரித்து உண்மை பேசி**
**உப்பில்லாக் கூழ்இட் டாலும்**
**உண்பதே அமிர்த மாகும்**
**முப்பழ மொடுபால் அன்னம்**
**முகம்கடுத் திடுவா ராயின்,**
**கப்பிய பசியி னோடு**
**கடும்பசி ஆகும்தானே(விவேகசிந்தாமணி84)**

முகமலர்ச்சியுடன் தரும் பொருளின் தன்மை, முகம் கடுத்து தரும் பொருளின் தன்மை என்று வேறுபடுத்திப் புலப்படுத்துகின்றது விவேகசிந்தாமணி. அபிதான சிந்தாமணி,

1. முகமலர்ச்சியுடன் இன்சொல் கூறல். 2. கால் கழுவ நீர் தருதல். 3. இருக்க மனை தருதல். 4. சோறிடுதல். 5. பருக நீர் தருதல். 6. தாம்புலம் தருதல். 7. படுக்க இடம் தருதல். 8. படுக்க பாய் தருதல். 9. பிரயாணம் செய்தால் வழிவிடுதல். ஆகிய ஒன்பது முறைகளைப் பின்பற்றுவது தலைசிறந்த உபசரிப்பாக அமையும் என்று குறிப்பிடுகிறது.

**வாயிலான விருந்து**

அக இலக்கியத்தில் தலைவன் தலைவி ஊடல் தீர்க்கும் வாயிலாக விருந்தினர் இடம் பெறுவது தொல்காப்பியப் பிரதியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**“தோழி தாயே பார்ப்பான் பாங்கன்**
**பாணன் பாட்டி இளையர் விருந்தினர்**
**கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்**
**யாத்த சிறப்பின் (தொல்காப்பியம்.கற்பு.52)**

இல்லற வாழ்வின் இணைப்புப் பாலமாக விருந்தினர் அமைந்துள்ளனர். மருதநிலத் தலைவியின் ஊடல் தீர்க்கும் வாயிலாக விருந்தினர் வருகை நிகழ்ந்தமையைப் பின்வரும் நற்றிணைப் பாடல் வழி காணலாம்.

**“சுதடமருப்பு எருமை மடநடைக் குழவி**
**- - - - - - - - - - - - - - - - - -**
**புகைஎண்டு அமர்த்த கண்ணள் தகைபெற**
**பிறைநுதல் பொறித்த சிலுநுண் பல்லியர்**
**அம்துகில் தனையில் துடைத்தனன், நப்புலந்து,**
**அட்டிலோளோ, அம்ம அரிவை**
**மேக்கே வருகதில் விருந்தே! சிவப்பு ஆன்றுஇ**
**சிறியமுன் எயிறு தோன்ற**
**முறுவல் கொண்ட முகம்காண்கும்மே.”**
**(நற்றிணை126)**

உணவு தயாரிக்கும் தலைவியின் கண்கள் புகையுண்டு சோர்வோடு விளங்கின. அழகுடைய நெற்றியில் வியர்வைத்துளிகள் அரும்பின. இவ்வாறு சமைக்கும் தலைவி தலைவனோடு ஊடல் தலைவியை விரும்புகின்ற பெரிய வெற்றியை உடையவன் தலைவியின் உள்ளத்தின் தன்மையை எண்ணிக்கொண்டு பெரிய தகுதியுடையவளே விழாகொண்டாணாற் போல பெரிய பானையில் சோறு சமைத்து வருபவர்களுக்கு எல்லையில்லாமல் உண்ணுவதற்க்கு கொடுத்து செல்வமுடைய இல்லம் பொலியுமாறு அகலத்திறந்த வாசலுடன் பலர் உண்ணும்படி பசுமையான கொழுப்புடன் ஒழுகுகின்ற நெய் நிறைந்த சோற்றை குற்றமில்லாத உயர்ந்த குடியின் சான்றோர் மற்றும் சுற்றத்தாறும் விருந்து உணவாக உண்டு மிஞ்சியதை உன்னுடன் உண்ணுதல் உயர்ந்தது என்று பருத்துண்டு வாழும் அறமுடைய இல்லறச் சிறப்பு. கொண்டுள்ளாள். ஆதலால் பரத்தமை கொண்ட தலைவன் தனது ஊடல் தீர்க்கும் வாயிலாக விருந்தினர் வருகையை வேண்டுகிறான்.

தலைவன் மேல் ஊடல் இருக்கும் சமயத்தில் கூட விருந்தினர்களை உபசரிக்கத் தயங்கமாட்டாள்

தலைவி என்பதே அகஇலக்கியம் காட்டும் உண்மையாகும்.

**. . . .குன்றூர் அன்ன என்**
**நல்மனை நனிவிருந்து அயரும்**
**கைதூ வின்மையின் எய்தாமாறே”**
**(நற்றிணை.280)**

**நல்விருந்து**

தலைவன் தலைவி பைந்நிணம் கலந்த நெய்ச்சோற்றை விருந்தாகத் தந்துள்ளனர். தங்களுக்கு என்று உணவைப் பத்திரப்படுத்தாமல் அனைவருக்கும் தந்துவிட்டு எஞ்சிய சோற்றை தலைவன் தலைவி விரும்பி உண்டுள்ளனர்.

**“சாறு அயர்ந்தன்ன மிடா அச்சொன்றி**
**வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப**
**மலரத் திறந்த வாயில் பலருணப்**
**பைந்நிணம் ஒழுகிய நெய்மலி அடிசில்**
**வசையில் வான் திணைப் புரையோர் கடும்பொடு**
**விருந்துண்டு எஞ்சிய மிச்சில் பெருந்தகை**
**நின்னோடு உண்டலும் புரைவது என்று**
**ஆங்கு அறம் புணைஆகத்**
**தேற்றிப் பிறங்கு மலை” (குறிஞ்சி .201-205)**

தலைவியை விரும்புகின்ற பெரிய வெற்றியை உடையவன் தலைவியின் உள்ளத்தின் தன்மையை எண்ணிக் கொண்டு பெரிய தகுதியுடையவளே விழாகொண்டாடிணாற் போல பெரிய பானையில் சோறு சமைத்து வருபவர்களுக்கு எல்லையில்லாமல் உண்ணுவதற்க்கு கொடுத்து செல்வமுடைய இல்லம் பொலியுமாறு அகலத்திறந்த வாசலுடன் பலர் உண்ணும்படி பசுமையான கொழுப்புடன் ஒழுகுகின்ற நெய் நிறைந்த சோற்றை குற்றமில்லாத உயர்ந்த குடியின் சான்றோர் மற்றும் சுற்றத்தாறும் விருந்து உணவாக உண்டு மிஞ்சியதை உன்னுடன் உண்ணுதல் உயர்ந்தது என்று பருத்துண்டு வாழும் அறமுடைய இல்லறச் சிறப்பு. பகுத்துண்டு வாழும் இல்லறச் சிறப்பும் குறிஞ்சிப்பாட்டில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**விருந்தினருக்கு அறிவிப்பு செய்தல்**

நம் முன்னோர் இரவுப்பொழுதில் உணவுக்கு வழிதேடி வரும் புதியவர்கள் தடுமாறா வண்ணம் அறிவுப்புச் செய்து உணவு வழங்கியுள்ளனர். இஃது குறுந்தொகை பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**“புள்ளும் மாவும் புலம்பொடு வதிய**
**நள்ளென வந்த நார்இல் மாலை,**
**பலர்புகு வாயில் அடைப்புக் கடவுநர்,**
**“வருவீர் உளரோ?“ எனவும்,**
**வாரார் தோழி நம் காதலரே”**
**(குறுந்தொகை.118)**

பொழுது கண்டு இரங்கிய நெய்தல் நிலத்தலைவி தலைவன் வருகை நீட்டித்த வலி, தோழியிடம் உரையாடிய பாடலில், “பலர் புகும் அளவிற்கு உள்ள பெரிய வாயிலை அடைப்பதற்கு முன்னம் வீட்டிற்குள் உணவருந்த வரவிருப்பவர் யாரும் உள்ளீர்களா? என்று அறிவிக்கும் வீடுகள்” இருந்ததாகக் கூறுகின்றான். இன்றைய நடைமுறை வாழ்வில் அறிவிப்பு பலகைகள் அன்னச் சத்திரங்களை இனங்காட்டுதல் போன்று சங்ககாலத்தில் அறிவிப்புச் செய்து விருந்தோம்பியுள்ளனர் என்பது சிறப்பிற்குரியது.

**வினை முடிந்தால் விருந்திடும் மரபு**

தலைவன் வினை மீண்டு திரும்பினால் விருந்து கொடுக்கும் பழந்தமிழ் மரபு அக இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளதைத் தொல்காப்பியர் சுட்டுகின்றார்.

**“அருந்தொழில் முடிந்த செம்மற் காலை**
**விருந்தொடு நல்லவை வேண்டற்கண்ணும்சு**
**(தொல்.கற்பு.5)**

தலைவன் கூற்று நிகழுமிடங்களை சுட்டிய தொல்காப்பியர், வினை முடிந்து மீண்ட போது தனது இல்லத்தில் நிகழும் விருந்தோம்பலில் விருந்தினரிடம் நிகழும் கூற்றை தெளிவுறுத்து கின்றார்.

**“பெருஞ்சின வேந்தன் அருந்தொழில் தணியின்,**
**விருந்து நனி பெறுதலும் உரியன் மாதோ?**
**இருந்து தோன்று விசும்பின் உயர்நிலை உலகத்து**
**அருந்ததி அனைய கற்பின்,**
**குரும்பை மணிப்புண் புதல்வன் தாயே”**
**(ஐங்குறுநூறு.442)**

பாசறைக்கண் பருவவரவு காந்தி வருந்தும் தலைவனின் மனமானது வினை மீண்டால்

தலைவி விருந்திடுவாளே என்று ஏக்கம் கொள்கின்றது. என் புதல்வனின் தாய், அருந்ததி அனைய கற்பினாள் என்று தலைவியின் இல்லறத்திற்கான நற்பண்புகளும் பாடல்களில் சுட்டப்படுகின்றன.

போர்த்தொழில் முடித்து திரும்பிய முல்லை நிலத் தலைவன் தன குடும்ப நினைவுடன் வருகிறான். தேர்ப்பாகனை விரைந்து செலுத்து மாறு உத்தரவு இடுகிறான்.

**“செல்க பாக நின் செய்வினை நெடுந்தேர்**
**விருப்புறூஉம் பெருந்தோட் குறுமகள்,**
**மின்ஒளிர் அவிர்இழை நல்நகர் விளங்க,**
**புங்கட் புதல்வன் உறங்குவயின் ஒல்கி,**
**வந்தீக எந்தை! என்னும்**
**அம்தீம் கிளவி கேட்கம் நாமே.”**

**(நற்றிணை. பாடல். 221)**

தலைவன் வருகையால் வீட்டில் விருந்து நிகழும்என்றகுறிப்புணர்வுமட்டுமின்றி,அதனை விருப்பத்துடன் செயல்படுத்தும் இல்லறத்தால் கடமையும் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது.

அழுதனன் உறையும் அம்மா அரிவை விருந்து அயர் விருப்பொடு வருந்தினன் அசை இய முறுவள் இன்நகை காண்கம்! உறுபகை தணிந்தனன் உரவோன் வேந்தேசு(நற்றிணை. பாடல்.81)

ஆற்றிலிருந்து முல்லைநிலத் தலைவி விருந்திட முடியாது ஆற்றியிருக்கிறாள். தலைவன் வருகை விருந்தினர் வருகையைத் தடையின்றி அறிவிக்கும் என்பதால் தலைவனைக் கண்டவுடன் மகிழ்கின்றாள் தலைவி.

## விருந்திட்டு சுற்றம்ஓம்பலும் ஈகையும்

உறவினர்களுக்கு உணவு முதலியன தந்து பாது காத்தல் சுற்றம் ஓம்பலாகும். பழந்தமிழர்களின், மரபுகளில் விருந்திட்டு சுற்றம் ஓம்புதல் குறிப்பிடத் தகுந்த வழக்கமாகும்.

பாலைநிலத் தலைவி, பிரிவில் வருந்தும் போது தோழியானவள் சுற்றம் ஓம்பலின் கடமையை வற்புறுத்துகின்றாள். தலைவன் பிரிந்து சென்று பொருள் ஈட்டுவதே 'சுஇல்லை என்று இரந்த சுற்றத்தவருக்கு கொடுப்பதற்கே என்ற அறவுணர்வையும் போதிக்கின்றாள்.

**“அறந்தலை பிரியாது ஒழுகுலும், சிறந்த**
**கேளிர் கேடுபல ஊன்றலும், நாளும்**
**வருந்தா உள்ளமொடு இரந்தோருக்கு இல்”**
**எனச்**
**செய்வினை புரிந்த நெஞ்சினர்.”**

சங்ககால மக்கள் தன் வீடு, தன் பிள்ளை என்று சுயநலத்தோடு வாழாமல் சமூகத்தோடு ஒன்றுபட்டு வாழ்ந்துள்ளனர். இல்லறத்தான் தான்தேடிய பொருளை சுற்றத்தாரோடு பகிர்ந்து உண்டுள்ளான் என்பதைச் சங்க இலக்கியம் பதிவுசெய்துள்ளது.

**“பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்**
**அன்பெனப்படுவது தன்கிளை செறாஅமை”**

**(கலித்தொகை, பாடல். 133)**

அன்பு என்பதனைக் குறிப்பிடும் போது தன் கிளையோடு (சுற்றத்தினரோடு) ஒன்றுபடுதலே என்று குறிப்பிட்டுள்ளனர். சுற்றம் தழுவுதலுக்கு என்றே ஈகைப் பண்பை போற்றியுள்ளனர்.

**“திரியாச் சுற்றத்தோடு முழுதுசேண் விளங்கி**
**நடுக்கின்றி நீலியரோ அத்தை**

**(புறநானூறு, பாடல்.2)**

மன்னன் தன் சுற்றத்தோடு நிலைத்து நின்று ஆட்சி புரிய புறநானூறு சுட்டுவதும் நோக்கத்தக்கது.

**...........கிளையோடு கலிசிறந்து,**
**சாந்த ஞெகிழியின் ஊன்புழுக்கு அயரும்**
**குன்ற நாட (அகம்.172)**

தனது உறவினர்களோடு பலாப்பழத்தின் சாற்றைக் கொண்டு செய்த மதுவைப் பருகி சந்தனக் கட்டையை விறகாக வைத்துச் செய்த ஊன் கலந்த சோற்றினை உண்டு மகிழ்கின்றான் என்று குறிஞ்சி நிலத் தலைமகனின் சுற்றம் ஓம்பும்” நல்லறம் தோழியால் கூறப்பட்டுள்ளது.

## செலவழுங்குவித்தலில் விருந்தோம்பல்

செலவழுங்கல் என்றால் “பிரிதலைத் தவிர்த்தல்” என்று அகராதி விளக்கம் தருகின்றது. பொருளில்லார்க்கு இவ்வுலக வாழ்வு இல்லைசுசு என்று வாழ்வின் பயன் கருதிய தலைவன் பொருள் ஈட்டப் பிரியும் தருணம், தலைவியின் வருத்தத்தை எண்ணிய தோழி தலைவனிடம்

பயணத்தைத் தவிர்க்குமாறு கூறுவாள். தோழி குறிப்பிட்டதும் தலைவன் பயணத்தைத் தவிர்த்தலே செலவழுங்குவித்தல் துறை என உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். தொல்காப்பியர் "செலவழுங்குவித்தலை" "போகாமை" அன்று "வற்புறுத்திப் பிரிவது" என்கிறார். இத்தகைய செலவழுங்குவித்தல் துறை விருந்தோம்பலுக்குத் தேவையான பொருள் ஈட்டுவதற்குப் பிரியும் தலைவன் பிரிவைத் தாங்கியிருக்குமாறு பாடப்பட்டுள்ளது.

**"செலவிடை அழுங்கல் செல்லாமை அன்றே**
**வன்புறை குறித்த தவிர்ச்சியாகும்"**
**(தொல். கற்பு, நூற்.183)**

தலைவியின் மனதினைப் பிரிவுக்கு தயார்படுத்திப் பிரிதல் செலவழுங்கல் ஆகும். இத்தகைய செலவழுங்கும் காலத்தில் தலைவன், தலைவி, தோழி என்ற மூன்று பாத்திரங்களின்

மணவுணர்வுகள் நன்கு வெளிப்படுகின்றன. தலைவன், தலைவி என்ற பாத்திரத்தை ஒருங்கிணைக்கும் தோழியின் கடமையுணர்வு ஆழமாக செலவழுங்குவித்தலில் வெளிப்படுகின்றது. அவற்றோடு விருந்தோம்பும் அறமும் வெளிப்படுகின்றது.

**"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**
**அன்பொடு புணர்ந்த ஐந்திணை"**

என்ற தொல்காப்பிய விதிப்படி, ஐந்திணைகளில் அறம் பாடுதல் மரபாகி உள்ளது.

அவ்வடிப்படையில் "செலவழுங்குவித்தல்" பாடல்களில் தோழி வாயிலாக அறம் பேசப்படுகின்றது. அந்த அறம் விருந்தோம்பல் ஆகும்.

**"நச்சல் கூடாது, பெரும! இச்செலவு**
**ஒழிதல் வேண்டுவல், சுழின் பழி இன்று.**
**மன்னவன் புறந்தர வருவிருந்து ஓம்பித்**
**தன் நகர் விழையக் கூடின், (கலி. 8,19-23)**

மேற்கண்ட கலித்தொகை 8ஆம் பாடலில் தோழியின் வாயிலாக விருந்தோம்பல் அறம் பேசப்பட்டுள்ளது. "உம்மை நாடி வரும் விருந்தினரை உபசரித்து இல்லறம் நடத்தி இவளோடு கூடி வாழ்" எனத் தோழி கூறுகிறாள்.

கலைஞர்களுக்கு விருந்து சங்ககால மக்கள் கலைகளுக்கும் கலைஞர்களுக்கும் முக்கியத்துவம் தந்துள்ளனர்.

பாணர், பொருநர், கூத்தர், விறலியர் போன்ற கலைவளர் செம்மல்களைப் போற்றிப் பாதுகாத்துள்ளனர்.

தமது திறமைகளை வெவ்வேறு ஊர்களுக்குச் சென்று வெளிப்படுத்தச் செல்லும் இடங்களில் விருந்து உபச்சாரங்களைப் பெற்றுள்ளனர். இதனை ஆற்றுப்படை இலக்கியம் பதிவுசெய்துள்ளதைப் போன்று அகஇலக்கியமும் பதிவு செய்துள்ளது.

**"அன்னாய்! இவன் ஓர் இளமாணாக்கன்**
**தன்ஊர் மன்றத்து என்னன் கொல்லோ?**
**இரந்தூண் நிரம்ப மேனியொடு**
**விருந்தின் ஊரும் பெருங் செம்மலனே"**
**(குறுந்தொகை.33)**

பாணன் சிறந்த மாண்புடையவன் மன்றத்தில் திறன் வெளிப்படுத்துபவன். பிறரிடம் விருந்துண்டு வாழ்வதால் மெலிந்த தேகத்தை உடையவன் என்று சுட்டப்பட்டுள்ளதன் மூலம் கலைஞர்களின் வாழ்வே மற்றவர்கள் தரும் விருந்துகளில் கழிவது புலனாகின்றது.

### விருந்து பற்றிய நம்பிக்கை

சங்ககால மக்கள் சில சகுனங்களை வைத்து நன்மை, தீமைகளைக் கணிப்பார்கள். "புள நிமித்தம்" அவற்றில் குறிப்பிடத்தகுந்தது. "காகம் கரைவதை" விருந்தினர் வருகையை தெரிவிக்கும் சகுனமாகக் கருதியுள்ளனர். மேலும், இல்லற மகளிர் நாள்தோறும் காக்கைக்குப் பலியிடுதல் முறையை மேற்கொண்டுள்ளனர்.

**"திண்தேர்நள்ளி கானத்து அண்டர்**
**பல்ஆ பயந்த நெய்யின், தொண்டி**
**முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு**
**எழுகலத்து ஏந்தினும் சிறிதுஎன் தோழி**
**பெருந்தோள் நெகிழ்த்த செல்லற்கு**
**விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே**
**(குறுந்தொகை.210)**

புதிய விருந்தினர் வருகையை அறிவிக்கும் பொருட்டாக "காகம் கரைதல்" நம்பப்பட்டுள்ளது.

அதனால் விருந்தினர் வருகையை அறிவிக்கும் காக்கைக்கு கோப்பெரு நள்ளியின் காட்டிலுள்ள இடையர்கள் தந்த நெய்யுடன் தொண்டி ஊரில் விளைந்த வெண்ணெல் சோற்றைக் கலந்து தந்தாலும் தகாது என்று தோழி கூறுகின்றாள்.

## ஆய்வுச் சுருக்கம்

விருந்து விருந்தினர் விருந்தோம்பல் என்ற பண்பாட்டுத் தொடர்வினைகள் சங்கப் பாக்களில் அடையாளப்பட்டுள்ளன. சங்கஅகஇலக்கியம் சுட்டும் இல்லறத்தில் கணவனும் மனைவியும் ஆற்ற வேண்டிய அறமாக "விருந்தோம்பல்" சுட்டப்பட்டுள்ளது. கற்பொழுக்கத்தின் பயன் பற்றி கூறும் தொல்காப்பியர் அறம்புரி சுற்றமொடு சிறந்தது பயிற்றல் என்று "விருந்தோம்பும்" பாங்கினை வலியுறுத்தியுள்ளார். விருந்தோம்பலில் உணவு முறையானது குறிஞ்சி, முல்லை, பாலை, நெய்தல், மருதம் என்ற நில அமைப்பிற்கு ஏற்றவாறு மாறுபட்டு அமைந்துள்ளது. சுற்றம் ஓம்பலும், ஈகையும் கூட விருந்தோம்பலின் பாற்பட்டதே என்பது சான்றுகளின் வழி அறியத்தக்கது.

பழந்தமிழரின் உயரியப் பண்பாடு விருந்தோம்பல் தான் என்பதனை சங்கஇலக்கியம் தெளிவுறுத்துகின்றது.

## முடிவுரை

பழந்தமிழர் மரபில் விருந்தோம்பலை வாழ்க்கையின் உயிர்நாடியாக கொண்டதை சங்க கால இலக்கியங்கள் மூலம் அறிய முடிகிறது அதியமான் கிடைத்ததற்ககரிய நெல்லிக்கனி கிடைத்தும் தான் உண்டு நீண்ட காலம் வாழாமல் ஔவைக்கு தந்தது விருந்தோம்பலின் சிறப்பினை காட்டுகிறது

**"மருந்து ஆயினும் விருந்தோடு உண்சு என்பார் அந்தமிழ் மூதாட்டியார், தெய்வப் புலவராகிய திருவள்ளுவர்,**

**"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா மருந்தெனினும் வேண்டற்பாற் நன்று"**

என்று கூறியுள்ளார்.

**"இந்திரர் அமிழ்தம் இனியவதாயினும் இனிதெனத் தம்மியர் உண்டலும் இலரே"**

***(புறநானூறு-182)***

கிடைத்ததற்குரிய அமிழ்தம் கிடைத்தாலும் தான் மட்டும் உண்ணாமல் விருந்தினர்களோடு பருத்து உண்டார்கள் என்கிறது புறநானூறு (இதன் வழி) பண்டைத் தமிழரின் வாழ்வியல் ஆவணமாக இருக்கின்ற சங்க இலக்கியங்களில் பதிவாகியுள்ள விருந்தோம்பல் பண்புகள் தமிழர் மரபை பறைசாற்றுகின்றனவாக அமைவதை அறிய முடிகிறது

## பார்வை நூல்கள்

1. தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்புரணர் உரை- கௌரா பதிப்பகம். சென்னை
2. நற்றிணை கதிர் மகாதேவன்(உ.ஆ) - முல்லைப்பதிப்பகம், சென்னை
3. கலித்தொகை- ச.வே.சுப்பிரமணியன்- மணிவாசகர் பதிப்பகம்
4. அகநானூறு- ச.வே. சிப்பிரமணியன் - மணிவாசகர் பதிப்பகம்
5. ஐங்குறுநூறு - உவே.சா நூல் நிலையம், சென்னை
6. புறநானூறு மூலமும் உரையும் - குருநாதன்(ப.ஆ) - வடிவேல் பதிப்பகம், தஞ்சாவுர்
7. பத்துப்பாட்டு பொருநராற்றுப்படை மூலமும் உரையும் - டாக்டர் கதிர் முருகு - சாரத பதிப்பகம்
8. சிறுபாணாற்றுப்படை மூலமும் உரையும் - டாக்டர் கதிர் முருகு - சாரத பதிப்பகம்
9. பதிற்றுப்பத்து டாக்டர் உவே.சாமிநாதையர் உவே.சா நூல் நிலையம், சென்னை